செய்தி மாலை

தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம்

மடல்-50 பிப்ரவரி, 2026

தொழிலாளர் விரோதக் கொள்கைகளை உழைக்கும் வர்க்கத்துடன் ஒன்றிணைந்து எதிர்ப்போம்

12-02-2026 அன்று நடைபெறும் நாடு தழுவிய பொது வேலைநிறுத்தத்தில் பங்கேற்று வெற்றிபெறச் செய்வோம் - அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் அறைகூவல்

ஒன்றிய அரசு தற்போதுள்ள 29 தொழிலாளர் சட்டங்களுக்குப் பதிலாக 4 புதிய தொழிலாளர் குறியீடுகள் குறித்த அறிவிப்பை வெளியிட்டதற்கும், உழைக்கும் வர்க்கத்தின் மீதான தாக்குதல்கள் அதிகரித்து வருவதற்கும் எதிர்ப்பு தெரிவித்து, 10 மத்திய தொழிற்சங்கங்களான INTUC, AITUC, HMS, CITU, AIUTUC, TUCC, SEWA, AICCTU, LPF, UTUC ஆகியவை 2026 பிப்ரவரி 12 அன்று நாடு தழுவிய பொது வேலை நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்துள்ளன.



புதிய தொழிலாளர் குறியீடுகள் மற்றும் ஒன்றிய அரசின் தொழிலாளர் விரோதக் கொள்கையின் விளைவாக, கடினமான போராட்டங்களுக்குப் பிறகு வென்றெடுக்கப்பட்ட தொழிலாளர் அடிப்படை உரிமைகள் பறிக்கப்படும் சூழ்நிலை உருவாகியுள்ளதை நாம் அறிவோம்.

தொழிற்சங்கத்தைத் தொடங்குவது, தொழிற்சங்கத்தை நடத்துவது, தொழிற்சங்கத்திற்கு நிலையான தலைமைத்துவத்தை வழங்குவது, உரிமைகளை வென்றெடுக்க வேலைநிறுத்தங்களை செய்வது போன்ற தொழிலாளரின் அடிப்படையான உரிமைகளை இப்புதிய சட்டங்கள் தடை செய்யும் நிலைமை உருவாகியுள்ளது.

இந்திய நாடு பெரும் வேலையின்மையை எதிர்கொள்ளும் இந்த நேரத்தில், இளைஞர்களுக்கு அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்குப் பதிலாக, நிலையான கால வேலைவாய்ப்புத் திட்டம் (FIXED TERM EMPLOYMENT) இப்புதிய சட்டங்களில் முன்மொழியப்படுகிறது. பெரும்பாலான தொழிலாளர்கள் எந்தவொரு தொழிலாளர் சட்டங்களின் பாதுகாப்பு வரம்பிலிருந்தும் அகற்றப்பட்டு, மேலும் அதிகமான சுரண்டலுக்கு ஆளாவதற்கு இப்புதிய சட்டங்கள் வழிவகுக்கின்றன. இச்சட்டங்களை அனுமதித்தால், நம் நாட்டின் எதிர்காலமான இளைஞர்களின் பணி வாய்ப்பு கேள்விக்குறியாக்கப்படும்.

நாம் வேலை-வாழ்க்கை சமநிலை (**WORK LIFE BALANCE**) வேண்டி, வாரம் **5** நாள் வங்கிப் பணியைக் கோரும்போது, வேலை நேரத்தை அதிகரிக்க முதலாளிகளுக்கு தடையற்ற அதிகாரம் வழங்க ஒன்றிய அரசின் புதிய கொள்கைகள் வழிகோலுகின்றன. அரசின் அனுமதியின்றி கதவடைப்பு செய்யவும், ஆட்குறைப்பு செய்யவும் முதலாளிகளுக்கு சுதந்திரம் வழங்கப்படும் வகையிலும், அத்தகைய தாக்குதல்களை எதிர்த்து தொழிற்சங்கங்களின் வேலைநிறுத்தங்கள் மேற்கொள்வது தடைசெய்யப்படும் சூழலையும் இப்புதிய சட்டங்கள் உருவாக்கியுள்ளன.



வங்கித் துறையிலும், **IDBI** வங்கியை விற்க முயற்சிப்பது, தனியார் வங்கிகளை வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு விற்பது, பொதுத்துறை வங்கிகளைத் தனியார்மயமாக்க முயற்சிப்பது போன்ற தீவிரமான தாக்குதல்களைக் காண்கிறோம். அரசாங்கம் **IMF,** உலக வங்கி போன்றவற்றின் அழுத்தம் மற்றும் சர்வதேச நிதி மூலதனத்தின் செல்வாக்கின் கீழ் செயல்படுகிறது என்பது தெளிவாகிறது. எனவே, வங்கித்துறை சார்ந்த போராட்டங்களுடன் கூடுதலாக, பொது தொழிற்சங்க இயக்கத்தின் போராட்டங்களிலும் நாம் முக்கியமானதொரு பகுதியாக இருக்க வேண்டியது அவசியமாகும்.



உழைக்கும் மக்களும், மத்திய தொழிற்சங்கங்களும் அறிவித்துள்ள பிப்ரவரி **12, 2026** அன்று நடைபெறவுள்ள நாடு தழுவிய பொது வேலைநிறுத்தப் போராட்டத்தில் வங்கி ஊழியர்களும் பங்கேற்பது நம்முடைய முக்கியமான தொழிற்சங்கக் கடமை ஆகும்.

எனவே, பிப்ரவரி 12, 2026 அன்று வங்கித் துறையில் முழுநாள் வேலைநிறுத்தத்தைக் அனுசரிக்க அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் -AIBEA, அகில இந்திய வங்கி அதிகாரிகள் சங்கம் - AIBOA மற்றும் இந்திய வங்கி ஊழியர் கூட்டமைப்பு -BEFI கூட்டாக அறைகூவல் விடுத்துள்ளது.

நாடு தழுவிய வங்கி ஊழியர் வேலை நிறுத்தத்தில் பங்கேற்று முழு வெற்றிபெறச் செய்வோம்

தற்போதுள்ள 29 தொழிலாளர் சட்டங்களுக்குப் பதிலாக கொண்டுவரப்பட்ட புதிய தொழிலாளர் குறியீடுகளின் பிற்போக்கு விதிகள் மற்றும் ஒன்றிய அரசின் பல்வேறு மக்கள் விரோத மற்றும் தொழிலாளர் விரோத கொள்கைகள், நடவடிக்கைகள் மற்றும் முன்மொழிவுகளுக்கு எதிராக, INTUC, AITUC, HMS, CITU, AIUTUC, TUCC, SEWA, AICCTU, LPF, UTUC ஆகிய 10 மத்திய தொழிற்சங்கங்கள் மற்றும் பல்வேறு துறை சார்ந்த தொழிற்சங்க கூட்டமைப்புகள் விடுத்த வேலை நிறுத்த அழைப்பிற்கு ஆதரவாக வங்கி ஊழியர் வேலை நிறுத்தம் அறிவிக்கப்பட்டுள்ளது.

நம் முக்கியக் கோரிக்கைகள்

- **பொதுத்துறை வங்கிகள் மற்றும் பொதுக் காப்பீட்டு நிறுவனங்களை வலுப்படுத்து !**
- **வங்கிகள், LIC மற்றும் GIC தனியார்மயமாக்கல் மற்றும் அரசின் பங்குகளை விற்பதை நிறுத்து !**
- **காப்பீட்டுத் துறையில் 100% ஆக உயர்த்தப்பட்ட அந்நிய நேரடி முதலீட்டைத் திரும்பப் பெறு !**
- **பொதுத்துறையிலுள்ள பொதுக் காப்பீட்டு நிறுவனங்களை ஒரே நிறுவனமாக இணைத்திடு !**
- **வங்கிகளில் காலிப்பணியிடங்களில் போதுமான நிரந்தர ஊழியர்களை நியமனம் செய் !**
- **ஒப்பந்த அடிப்படையில் பணி நியமனம் செய்வதை உடனே நிறுத்து !**
- **புதிய ஓய்வூதியத் திட்டத்தினை ரத்துசெய்து பழைய ஓய்வூதியத் திட்டத்தினை அமல்படுத்து !**
- **வேலைப் பாதுகாப்பினை கேள்விக்குறியாக்கும் FIXED TERM EMPLOYMENT திட்டத்தினை கைவிடு!**
- **பெருநிறுவனங்களிடமிருந்து வாராக் கடன்களை வசூலிக்க கடுமையான நடவடிக்கைகளை எடு !**
- **சாதாரண வாடிக்கையாளர்களுக்கான வங்கிக் கட்டணங்களைக் குறைத்திடு !**

பொது வேலைநிறுத்தத்தினை 12-02-2026 அன்று வங்கித் துறையில் வெற்றிகரமாக அமல்படுத்திட கீழ்க்கண்ட போராட்ட நடவடிக்கைகள் அறிவிக்கப்பட்டுள்ளது:

28-01-2026 முதல் 11-02-2026 வரை	**வேலைநிறுத்த முக்கியத்துவம் குறித்து அனைத்து ஊழியர்களையும் ஒன்றிணைத்து ஒருமித்த உறுப்பினர் கூட்டங்கள், மற்றும் ON-LINE பிரச்சாரக் கூட்டங்கள் நடத்துதல்**
08-02-2026	**சமூக ஊடகங்கள் மூலம் வேலை நிறுத்தப் பிரச்சாரக் கூட்டங்கள் நடத்துதல்**
09-02-2026	**அனைத்து உறுப்பினர்களும் கோரிக்கை அட்டை அணிந்து பணியாற்றுதல்**
11-02-2026	**அனைத்து மையங்களிலும் பெருந்திரள் ஆர்ப்பாட்டங்கள் நடத்துதல்**
12-02-2026	**நாடு தழுவிய முழுநாள் வங்கி வேலை நிறுத்தம்- பேரணிகள்-ஆர்ப்பாட்டங்கள்**

மாநிலம் தழுவிய பொது வேலை நிறுத்த ஆயத்த மாநாடு கடந்த 23-01-2026 அன்று திருச்சி நகரில் நடைபெற்றது. இம்மாநாட்டில் சம்மேளனத்தின் தலைவர்கள் கலந்துகொண்டு உரையாற்றினர்.

புதிய தொழிலாளர் சட்டங்களின் பிற்போக்கு அம்சங்கள் குறித்தும், அதற்கு எதிராகப் போராட வேண்டியதன் முக்கியத்துவம் குறித்தும் நமது அனைத்து உறுப்பினர்களுக்கும் விளக்கமளிக்கும் வகையில் நமது இணைப்பு சங்கங்கள் அனைத்து மட்டங்களிலும் கூட்டங்களை நடத்த வேண்டும் என்று சம்மேளனம் கேட்டுக் கொள்கிறது.

மேற்கண்ட அனைத்து போராட்ட நடவடிக்கைகளிலும் நம் உறுப்பினர்கள் முழு அளவில் பங்கேற்று **12-02-2026** அன்று பொது வேலைநிறுத்தத்தினை நமது மாநிலத்தில் முழு வெற்றிபெறச் செய்யுமாறு அனைத்து இணைப்புச் சங்கங்களையும், உறுப்பினர்களையும் தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் கேட்டுக் கொள்கிறது.

வாரத்தில் ஐந்து நாள் வங்கிச் சேவையினை அமல்படுத்த வலியுறுத்தி நாடு தழுவிய வேலை நிறுத்தப் போராட்டம் மாபெரும் வெற்றி



வங்கிச் சங்கங்களின் கூட்டமைப்புடன் **(UFBU)** நடைபெற்ற உடன்படிக்கையில் ஒப்புக்கொண்டவாறு வாரம் ஐந்து நாள் வங்கிச் சேவை முறையை அறிமுகப்படுத்த தொடர்ந்து காலம் தாழ்த்தும் ஒன்றிய அரசின் போக்கினை கண்டித்து, ஒட்டுமொத்த வங்கி ஊழியர்களும் தங்கள் எதிர்ப்பினை தெரிவிக்கும் வகையில் வங்கி ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் **UFBU** அமைப்பின் அறைகூவலுக்கு இணங்க கடந்த **27-01-2026** அன்று நாடு தழுவிய வேலை நிறுத்தத்தினை வெற்றிகரமாக அனுசரித்தனர்.

ஒன்றிய அரசாங்கம் நம் வேலைநிறுத்தத்தை ஒத்திவைக்கக் கோரியபோது, அரசாங்கத்தின் சாதகமான அறிவிப்பிற்காக **UFBU** ஜனவரி **26** ஆம் தேதி மாலை வரை காத்திருந்தும், ஒன்றிய அரசின் தரப்பிலிருந்து பிரச்சினையினைத் தீர்க்கும் வகையிலான எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாத காரணத்தினால் அனைத்து வங்கி ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் மீது இந்த வேலை நிறுத்தம் திணிக்கப்பட்டது.



வேலைநிறுத்தத்தின் காரணமாக, மாநிலமெங்கும் இயல்பான வங்கிச் செயல்பாடுகள் பெரிதும் பாதிக்கப்பட்டு பெருமளவிலான வங்கிக் கிளைகள் மூடப்பட்டு வங்கிப் பணிகள் முடங்கின.

வங்கி ஊழியர்களின் நீண்டநாள் கோரிக்கையான வாரம் ஐந்து நாட்கள் வங்கிச் சேவையின் அவசியம் கருதி, ஒன்றிய அரசு இக்கோரிக்கையினை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை விரைந்து எடுத்து, அமல்படுத்தாவிட்டால் மேலும் வலிமையான போராட்டங்களை மேற்கொள்வது குறித்து முடிவெடுப்பதற்கு **UFBU** கூட்டம் விரைவில் நடைபெறவுள்ளது.



பொதுத்துறை வங்கிகள், தனியார்துறை வங்கிகள், பிராந்திய கிராமப்புற வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகளில் செயல்படும் நமது அனைத்து இணைப்பு சங்கங்களையும் சார்ந்த உறுப்பினர்கள் இந்த வேலை நிறுத்தத்தில் முழு அளவில் பங்கேற்று நாடு தழுவிய வங்கி ஊழியர் வேலை நிறுத்தத்தினை பெரும் வெற்றி பெறச் செய்தனர்.



வேலைநிறுத்தம் மற்றும் அது தொடர்பான ஆர்ப்பாட்டங்கள், தர்ணா ஆகிய போராட்டங்களில் பங்கேற்ற அனைத்து உறுப்பு சங்கங்களுக்கும் மற்றும் உறுப்பினர்களுக்கும் தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

வங்கிச் சங்கங்களின் கூட்டமைப்பு (**UFBU**) விரைவில் அறிவிக்கவுள்ள போராட்ட திட்டங்களை முழுமையாக வெற்றிபெறச் செய்யும் வகையில் அனைத்து வங்கிச் சங்கங்களும் நம் கோரிக்கை தொடர்பான ஊழியர் கூட்டங்களையும் பிரச்சார நடவடிக்கைகளையும் தீவிரப்படுத்திட தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் கேட்டுக் கொள்கின்றது.



UFBU அறிவிக்கவுள்ள அடுத்தகட்ட போராட்ட நடவடிக்கைகள் குறித்து விரைவில் தோழர்களுக்கு தெரிவிக்கப்படும்.

வங்கிகளில் பணியாற்றும் இளம் தோழர்களுக்கான தொழிற்சங்கப் பயிலரங்கம் - தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் ஏற்பாடு

தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் சார்பில் **29-01-2026** அன்று நமது சங்கத்தின் எதிர்காலத் தலைவர்களுக்கு தொழிற்சங்கக் கல்வி மற்றும் பயிற்சி அளிப்பதற்கான முயற்சியின் ஒரு பகுதியாக நடைபெற்ற தொழிற்சங்கப் பயிலரங்கில் சென்னை நகரம் மற்றும் அருகிலுள்ள மாவட்டங்களைச் சேர்ந்த இளம் செயற்பாட்டாளர்களுக்கான தொழிற்சங்கப் பயிலரங்கு நடைபெற்றது.



இப்பயிலரங்கில் சென்னை நகரம், காஞ்சிபுரம், வேலூர், புதுச்சேரி, கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களைச் சேர்ந்த பல்வேறு வங்கிகளைச் சேர்ந்த **22** பெண் தோழர்கள் உட்பட **106** தோழர்கள் பங்கேற்றனர்.

இப்பயிலரங்கை அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் **C H** வெங்கடாசலம் அவர்கள் துவக்கி வைத்து அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் வரலாறு மற்றும் அதன் மாபெரும் தலைவர்கள் குறித்து விரிவுரை ஆற்றினார். **1946**ம் ஆண்டு அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் துவக்கப்பட்ட பின்னணியையும், அதனைத் தொடர்ந்து அனைத்து வணிக வங்கிகள், கூட்டுறவு வங்கிகள், கிராமிய வங்கிகள் மற்றும் அந்நிய நாட்டு வங்கிகளில் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் கட்டமைக்கப்பட்ட வரலாற்றினை விளக்கினார். தோழர் பிரபாத்கர், தோழர் பர்வானா, தோழர் **N** சம்பத், தோழர் **C S** சுப்பிரமணியன் ஆகிய முன்னோடித் தலைவர்கள் நமது சங்கத்தை மாபெரும் சக்தியாக வளர்த்திட மேற்கொண்ட தியாகத்தினை தோழர் **C H** வெங்கடாசலம் அவர்கள் நினைவு கூர்ந்து புகழ்ந்துரைத்தார்.

தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச்செயலாளர் தோழர் **E** அருணாசலம் அவர்கள் இந்திய வங்கித்துறை குறித்து விரிவாக உரையாற்றினார். இந்திய வங்கித் துறை எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் பொதுத்துறை வங்கிகளை பாதுகாத்திட அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் மேற்கொண்ட தொடர்ந்த போராட்ட நடவடிக்கைகள் குறித்து விரிவாக விளக்கினார்.

தனியார் வசமிருந்த வங்கிகளை பொதுத்துறையில் கொண்டுவந்து, அதன் காரணமாக ஏராளமான வங்கிக் கிளைகளை கிராமப்புறங்களில் திறந்ததோடு மட்டுமின்றி வங்கி ஊழியர்கள் பெற்றுள்ள சலுகைகள் மற்றும் ஊழியர்களுடைய உரிமைகள் அனைத்தும் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் தொடர் போராட்டங்களின் விளைவாக பெற்றவையே என்று தோழர் **E** அருணாசலம் அவர்கள் கூறினார்.



அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் தொடர் முயற்சிகள் வாயிலாக இருதரப்பு ஒப்பந்தங்கள் மூலம் வங்கி ஊழியர் பெற்றுள்ள பணிப் பாதுகாப்பு நடைமுறைகளை நம் சங்கப் பொறுப்பாளர்கள் முறையாகப் பயின்று, ஊழியர்களுக்கு எதிரான, வங்கி நிர்வாகங்களின் குற்றப்பத்திரிகைகள், இடைநீக்கங்கள் மற்றும் துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கைகளை எதிர்கொண்டு எவ்வாறு உறுப்பினர்களை பாதுகாக்க வேண்டும் என்பது குறித்து சம்மேளனத்தின் சட்டக்குழு பொறுப்பாளர் தோழர் **K** கோவிந்தராஜ் அவர்கள் விளக்கினார்.



தொழிற்சங்கப் பயிலரங்கில் உரையாற்றிய சம்மேளனத்தின் தொழிற்சங்க பயிற்சி வகுப்புகளின் பொறுப்பாளர் தோழர் **V** இரகுராமன் அவர்கள், இதனைப் போன்ற பயிலரங்கங்களில் இளம் உறுப்பினர்கள் ஆர்வமுடன் பங்கேற்று தங்களை தொழிற்சங்கப் பணிகளில் முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு, சங்கத்தின் எதிர்கால தலைவர்களாக உருவாக வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

தோழர் என். சம்பத் நூற்றாண்டு விழா கொண்டாட்டங்களின் கீழ், நமது கல்வித் துறையால் ஏற்பாடு செய்யப்பட்ட இப்பயிலரங்கில் கலந்து கொண்டு பயன்பெற்ற தோழர்கள் அனைவரும் முழு ஈடுபாட்டுடன் பயிலரங்கில் பங்கேற்றதன் காரணமாக நிகழ்ச்சி வெற்றிகரமாக நிறைவடைந்தது.



இப்பயிலரங்கில் பங்கேற்ற பிரதிநிதிகள், இதனைப் போன்ற தொழிற்சங்க வகுப்புகளில் பங்கேற்பது தொழிற்சங்க இயக்கத்தில் பணியாற்றும் புதிய தோழர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும் என்றும், எதிர்வரும் நாட்களில் மேலும் பல்வேறு பயிற்சி வகுப்புகளை தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் நடத்திடவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தனர்.

திருப்பூர் மாவட்ட வங்கி ஊழியர் சங்கத்தின் மாநாடு - 04-01-2026

திருப்பூர் மாவட்ட வங்கி ஊழியர் சங்கத்தின் மாநாடு கடந்த **04.01.2026** அன்று திருப்பூர் நகரில் நடைபெற்றது. திருப்பூர் மாவட்டத்தில் பணியாற்றும் ஏராளமான உறுப்பினர்கள் மாநாட்டில் கலந்து கொண்டனர். மாநாட்டினை தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் **E** அருணாசலம், அவர்கள் துவக்கி வைத்தார். தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் இணைச் செயலாளர்கள் தோழர் **R** ஜெயபிரகாஷ் மற்றும் தோழர் **K** பிரகாஷ் ஆகியோர் மாநாட்டில் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினர்.



மாநாட்டில் துவக்கவுரை ஆற்றிய தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் **E** அருணாசலம் அவர்கள் தன்னுடைய உரையில், ஒன்றிய அரசின் பொதுத்துறை விரோத நடவடிக்கைகளை கண்டித்ததுடன், இதனை எதிர்த்து மேலும் தீவிரமாகப் போராட வேண்டியதன் அவசியத்தினை வலியுறுத்தினார்.

தற்போது பொதுத்துறை வங்கிகளில் அனுமதிக்கப்பட்டுள்ள **20%** வரையிலான அந்நிய முதலீட்டினை **49%** வரை உயர்த்துவதற்கான ஒன்றிய அரசின் முடிவு, பொதுத்துறை வங்கிகளுக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக மாறியுள்ளது என்று தோழர் **E** அருணாசலம் அவர்கள் கூறினார். இதனால், நம் நாட்டின் வங்கிகள் அந்நிய நாட்டு நிறுவனங்களின் கட்டுப்பாட்டுக்குள் செல்லும் அபாயம் ஏற்பட்டு, சுதந்திரத்திற்கு முன் கிழக்கிந்திய கம்பெனி இந்தியாவை ஆட்சி செய்த காலத்தைப் போன்ற நிலைமைக்கு இட்டுச் செல்லும் என்று தோழர் **E** அருணாசலம் அவர்கள் எச்சரித்தார்.

மேலும், அந்நிய நாட்டு வங்கிகள் நம் தனியார் வங்கிகளை முழுமையாக அபகரிக்கும் திட்டங்கள் ஏற்பட்டு பெரும் அச்சுறத்தல்களுக்கு உள்ளாகியுள்ளன என்றும், நாட்டில் ஏழை, எளிய மக்கள் கல்விக்கடன், சிறு தொழில் கடன், விவசாயக் கடன் போன்ற நிதியு உவிகளைப் பெறுவதற்கு பொதுத்துறை வங்கிகள்தான் ஆதாரமாக உள்ளது என்று எடுத்துரைத்தார்.



இந்திய நாட்டிற்கு தனியார் வங்கிகள் அல்லது அந்நிய நாட்டு வங்கிகள் தேவையில்லை. இந்திய மக்களுக்கும் இந்தியப் பொருளாதாரத்தின் ஸ்திரத் தன்மைக்கும் உறுதுணையாக இருந்து பொதுத்துறை வங்கிகள் மட்டுமே செயலாற்ற முடியும் என்றும் தோழர் **E** அருணாச்சலம் மேலும் கூறினார்.

மாநாட்டின் இறுதியில், திருப்பூர் மாவட்ட வங்கி ஊழியர் சங்கத்தின் தலைவராக தோழர் **G** அருண் குமார் (கனரா வங்கி) அவர்களும், பொதுச் செயலாளராக தோழர் **M** கோபாலகிருஷ்ணன் (யூனியன் வங்கி) அவர்களும், பொருளாளராக தோழர் **A** மோகன் குமார் (பஞ்சாப் நேஷனல் வங்கி) அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

புதிதாகப் பொறுப்பேற்றுள்ள திருப்பூர் மாவட்ட வங்கி ஊழியர் சங்கப் பொறுப்பாளர்களை தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் வாழ்த்துகின்றது.

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் 80ம் ஆண்டினைக் குறிக்கும் வகையில் 8000 கிலோமீட்டர் இருசக்கர வாகனப் பிரச்சாரம் - தோழர் சாதத்திற்கு வாழ்த்துக்கள்



தோழர் சாதத் சேலத்தில் உள்ள கரூர் வைஸ்யா வங்கியில் பணிபுரியும் ஒரு இளம் ஊழியர். தோழர் சாதத் கரூர் வைசியா வங்கி ஊழியர் சங்கத்தின் அமைப்புச் செயலாளராகவும், சேலம் மாவட்ட வங்கி ஊழியர் சங்கத்தின் செயற்குழு உறுப்பினராகவும் உள்ளார். தோழர் சாதத் மோட்டார் சைக்கிளில் நீண்ட தூர இருசக்கர வாகனப் பயணங்களை மேற்கொண்டு பல்வேறு சாதனைகள படைத்துள்ளார்.

2026 ஏப்ரல் மாதம் பெங்களூர் மாநகரில் நடைபெறவுள்ள அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் முப்பதாவது தேசிய மாநாட்டிற்கு முந்தைய நாள், தோழர் சாதத் சேலத்திலிருந்து பெங்களூரு வரை இருசக்கர வாகன பிரச்சாரப் பயணத்தை மேற்கொள்ளவிருக்கிறார்.

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் எண்பதாவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் “மக்களுக்கான வங்கிகள் - தேசத்திற்கான வங்கிகள்” என்ற பிரச்சார திட்டமாக நமது செங்கொடி ஏந்தி தோழர் சாதத் சேலத்திலிருந்து **8000** கிலோமீட்டர் இருசக்கர வாகனப் பயணமாக ரிஷிகேஷ் மற்றும் காத்மாண்டு சென்று திரும்ப உள்ளார். தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் தனித்துவமான இப்பிரச்சாரப் பயண நிகழ்ச்சிக்கு நிதியுதவி அளிக்கிறது.



30-01-2026 அன்று சேலம் நகரில் தனது பிரச்சார இருசக்கர வாகனப் பயணத்தினைத் துவங்கிய தோழர் சாதக்கிற்கு சேலம் மாவட்ட வங்கி ஊழியர் சங்கத்தின் சார்பில் உற்சாகமான வழியனுப்பு விழா நடைபெற்றது.

பல்வேறு வங்கிகளைச் சேர்ந்த தோழர்கள், ஓய்வு பெற்றவர்கள், தோழர் சாதத்தின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் கரூர் வைசியா வங்கியின் பிராந்திய மேலாளர் ஆகியோர் இதில் பங்கேற்றனர். சேலம் மாவட்ட வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் **S** சம்பத் அவர்கள் பயணத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.



அதனைத் தொடர்ந்து, **31-01-2026** அன்று காலை சென்னை வந்தடைந்த தோழர் சாதத்திற்கு தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் நிர்வாகிகள் கலந்துகொண்ட இந்நிகழ்ச்சியில் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் **C H** வெங்கடாசலம் அவர்கள் கலந்து கொண்டு கொடியசைத்து வாழ்த்தி வழியனுப்பினார்.



அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் **80**வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் இந்தப் பிரச்சாரத்தை முன்னெடுத்துள்ள தோழர் சாதாத்தின் பயணம் பாதுகாப்பாகவும் வெற்றிகரமாகவும் அமைய தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் வாழ்த்துகிறது.

கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கச் செய்திகள்

கூட்டுறவு வங்கி ஊழியர்களின் ஊதிய உயர்வு கோரிக்கை சாசனம் நிர்வாகத்திடம் சமர்ப்பிப்பு - விரைவாக ஒப்பந்தம் ஏற்படுத்த நடவடிக்கை

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியில் அமலிலுள்ள இருதரப்பு ஒப்பந்தம் கடந்த **31.12.2025** உடன் முடிவடைந்த நிலையில் புதிய கோரிக்கை சாசனம் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கம் மற்றும் அதிகாரிகள் யூனியனால் தயாரிக்கப்பட்டு **31.12.2025** அன்று சங்க நிர்வாகிகளால் வங்கி நிர்வாக இயக்குநரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.



கடந்த ஒப்பந்தம் ஏற்படுவதில் சுமார் **4** ஆண்டு காலம் காலதாமதம் ஏற்பட்டது. இம்முறை அக்காலதாமதம் முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டுமென்றும், விரைவில் பேச்சு வார்த்தை துவங்கி ஒரு சில மாதங்களுக்குள் ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும் நிர்வாகத்திடம் நமது சங்கங்களால் வலியுறுத்தப்பட்டது. நிர்வாக இயக்குநரும் நமது சங்க கருத்துக்களை ஏற்றுக் கொண்டு விரைவில் பேச்சுவார்த்தை துவங்கப்படுமென்று தெரிவித்துள்ளார்.

இதேபோல் தமிழகத்திலுள்ள **180** தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் தற்போது நடைமுறையிலுள்ள ஒப்பந்தங்கள் கடந்த **31.12.2025** அன்றுடன் முடிவடைந்த நிலையில் புதிய கோரிக்கை சாசனம் தயாரிக்கப்பட்டு கடந்த **07.01.2026** அன்று கூட்டுறவு சங்க மாநிலப் பதிவாளர் அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டது. பதிவாளர் அவர்களிடமும் கடந்த காலங்களில் ஏற்பட்ட காலதாமதம் தவிர்க்கப்பட்டு விரைவில் பேச்சுவார்த்தை துவங்கி ஒப்பந்தங்கள் ஏற்பட ஆவன செய்திடவேண்டுமென்று வலியுறுத்தப்பட்டது.

பதிவாளர் அவர்களும் விரைந்து ஒப்பந்தம் காணப்படுமென்று உறுதியளித்துள்ளார். மேலும் இவ்வங்கிகள் விவசாயிகளுக்கு நீண்ட காலக் கடன் வழங்குவதற்கு ஏதுவாக தேசிய வங்கியிடமிருந்து (NABARD) மறுநிதி கடன் பெறுவதற்கு தேவையான உத்திரவாதத்தை மாநில அரசு வழங்கிட வேண்டுமென்று பதிவாளரிடம் வலியுறுத்தப்பட்டது.

தோழர் P பாலகிருஷ்ணன் அவர்களின் எட்டாவது ஆண்டு நினைவு நாள் மாநிலம் முழுவதும் கூட்டுறவு வங்கி ஊழியர்கள் அனுசரிப்பு

அகில இந்திய கூட்டுறவு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் துவக்ககால பொதுச் செயலாளராக அப்பொறுப்பில் சுமார் 31 ஆண்டு காலம் தொடர்ந்து கூட்டுறவு வங்கி ஊழியர்களின் மேம்பாட்டிற்காக பணியாற்றி மறைந்த தோழர் P பாலகிருஷ்ணன் அவர்களது எட்டாவது நினைவு நாள் மாநிலம் முழுவதும் கூட்டுறவு வங்கி ஊழியர்களால் 10.01.2026 அன்று அனுசரிக்கப்பட்டது.



தமிழ்நாட்டில் செயல்படும் பல்வேறு கூட்டுறவு வங்கி ஊழியர் சங்க அலுவலகங்களில் மறைந்த தோழர் P பாலகிருஷ்ணன் அவர்களது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து அவர் நினைவு போற்றப்பட்டது. இக்கூட்டங்களில் தோழர் P பாலகிருஷ்ணன் அவர்கள் கூட்டுறவு வங்கி ஊழியர்களின் பணிவிதி முறைகளில் மேம்பாடு மற்றும் வலிமையான கூட்டுறவு வங்கித்துறை ஆகியவற்றினை வலியுறுத்தி தம் வாழ்நாள் முழுமையும் அர்ப்பணித்தமைக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

வாரம் 5 நாட்கள் வங்கிச் சேவை கோரி நடைபெற்ற வேலைநிறுத்தத்தில் கூட்டுறவு வங்கி ஊழியர்கள் மாநிலமெங்கும் எழுச்சியுடன் பங்கேற்பு

வாரம் ஐந்து நாட்கள் வங்கிச் சேவை திட்டத்தினை வலியுறுத்தி கடந்த 27.01.2026 அன்று அகில இந்திய அளவில் நடைபெற்ற வேலைநிறுத்தத்தில் கூட்டுறவு வங்கி ஊழியர்கள் அனைவரும் பங்கேற்க வேண்டுமென்று AIBEA அறிவுறுத்தியிருந்தது. அதன்படி நாடு முழுவதும் கூட்டுறவு வங்கி ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் எழுச்சியுடன் பங்கேற்றனர். தமிழகத்திலும் வேலைநிறுத்தம் கூட்டுறவு வங்கிகளில் வெற்றியுடன் நடைபெற்றது

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, தமிழ்நாடு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள், 180 தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் ஆகியவற்றிலும், பெரும்பாலான நகரக் கூட்டுறவு வங்கிகளிலும் ஒரு சில மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளிலும் இவ்வேலைநிறுத்தம் 100 சதவீதம் வெற்றிகரமாக நடைபெற்றது.

நமது மாநிலத்தில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலுள்ள **AIBEA** சங்கம் மட்டுமின்றி பெரும்பான்மையான சங்கமான அனைத்து பணியாளர் சங்கமும் (**TACBEA**), நகர கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களிலுள்ள பணியாளர் சங்கமும் வேலைநிறுத்தத்தில் கலந்து கொண்டு முழு அளவு வெற்றி பெறச் செய்துள்ளனர்.



தமிழகத்தில் கூட்டுறவு வங்கிகள் மற்றும் சங்கங்களில் மட்டும் சுமார் **15000** தோழர்கள் கலந்து கொண்டு இந்த வேலைநிறுத்தத்திற்கு சிறப்பு செய்துள்ளனர்.

கூட்டுறவு வங்கிகளில் வேலை நிறுத்தத்தில் உணர்வுபூர்வமாக பங்கேற்று வெற்றி பெறச் செய்த அனைவருக்கும் நமது பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்கக்கோரி தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் சென்னையில் தர்ணா - **06.02.2026**

கூட்டுறவு வங்கிகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கு முறையான உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் வழங்கப்பட வேண்டுமென்று கடந்த **30** ஆண்டுகளாக தமிழ்நாடு கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கம் தமிழ்நாடு அரசை வலியுறுத்தி வருகின்றது. வணிக வங்கி ஊழியர்கள், கிராமிய வங்கி ஊழியர்கள், ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசு ஊழியர்களுக்கு முறையான ஓய்வூதியத்திட்டங்களான **OPS, NPS, UPS, TAPS** என்கிற வகையில் வழங்கப்பட்டு வருகின்றன.



கூட்டுறவு வங்கிகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கு நிர்வாகத்தின் பங்களிப்பாக வழங்கப்பட்டுவரும் வருங்கால வைப்புநிதிக்குப் பதிலாக பழைய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டுமென்று தொடர்ந்து தமிழ்நாடு கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கம் வலியுறுத்தி வருகின்றது. இருப்பினும் இக்கோரிக்கையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதுவும் இதுவரை ஏற்படவில்லை.

எனவே இக்கோரிக்கையை முன்னிறுத்தி தமிழகத்தில் வணிக வங்கி ஊழியர்கள் மற்றும் கூட்டுறவு வங்கி ஊழியர்கள் ஒன்றிணைந்து போராட வேண்டுமென்று கடந்த ஜூன் மாதம் 2025ல் நடைபெற்ற தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் 24வது மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

அம்முடிவின்படி வரும் **06.02.2026 வெள்ளிக்கிழமை அன்று சென்னை சேப்பாக்கம், சிவானந்தா சாலையில் (தொலைகாட்சி நிலையம் அருகில்) மாநில அளவிலான தர்ணா போராட்டம் நடைபெறும்** என்று சம்மேளனம் அறிவித்துள்ளது. இத்தர்ணா போராட்டத்திற்கு அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் **C H** வெங்கடாசலம் அவர்கள் தலைமையேற்க, தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் **E** அருணாச்சலம் அவர்களும், சம்மேளனத்தின் தலைவர் தோழர் **A** சிதம்பரம் அவர்களும் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்க உள்ளனர்.

மேலும் தமிழ்நாடு தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி அனைத்து பணியாளர் சங்கத்தின் மூத்த தலைவர் தோழர் **C** குப்புசாமி அவர்களும், பொதுச் செயலாளர் தோழர் **S N** பாலகிருஷ்ணன் அவர்களும் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்க உள்ளனர். சென்னையில் நடைபெறவுள்ள இந்த தர்ணா போராட்டத்தில் நமது சங்கத்தின் முன்னணித் தலைவர்களும், தோழர்களும் பெருமளவில் கலந்துகொள்ள வேண்டுகிறோம்.

இந்திய தொழில்துறை வளர்ச்சிக்கு தொழிற்சங்கங்கள் தடையாக உள்ளன என்ற இந்தியத் தலைமை நீதிபதி கூறிய பொறுப்பற்ற கருத்துக்களுக்கு மத்திய தொழிற்சங்கங்கள் கடும் கண்டனம் - போராட்ட அறிவிப்பு

இந்தியாவின் தொழில்துறை வளர்ச்சி தடைபடுவதற்கும், தொழிற்சாலைகள் மூடப்படுவதற்கும் 'தொழிற்சங்கங்கள்தான்' காரணம் என்று இந்தியத் தலைமை நீதிபதி சூர்யகாந்த் குற்றம் சாட்டியுள்ளது அனைத்து தொழிற்சங்கங்களையும், தொழிலாளர்களையும் கடும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது.



தொழிற்சங்கங்களைக் குறைகூறும் தலைமை நீதிபதியின் இத்தகைய கருத்துக்கள் இந்தியத் தொழிற்சங்கங்களின் அர்ப்பணிப்புடன் கூடிய செயல்பாடுகள், தொழிலாளர்களின் குறைந்தபட்ச ஊதிய உரிமைகள் மற்றும் உழைப்புச் சுரண்டல் குறித்த யதார்த்தத்தை சிதைக்கும் வகையில் அமைந்துள்ளது.

பெருகிவரும் சுரண்டலை எதிர்கொண்டு, அதனால் சோர்வு மற்றும் மரணங்களுக்கு தொழிலாளர்கள் ஆளாகி வரும் தற்போதைய காலகட்டத்தில் தலைமை நீதிபதியின் இத்தகைய அதிர்ச்சியூட்டும் மிகவும் துரதிர்ஷ்டவசமான மற்றும் அரசியலமைப்புக்கு முரணான கருத்துக்களுக்கு மத்திய தொழிற்சங்கங்கள் கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளன.

வீட்டுப் பணியாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் கோரி 'பெண் தொழிலாளர் சங்கம்' தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்த உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி அப்போது தெரிவித்த இத்தகைய கருத்துக்களைத் திரும்பப் பெறுமாறு வலியுறுத்தும் மத்திய தொழிற் சங்கங்கள், இக்கருத்துக்களுக்கு எதிரான "கடும் எதிர்ப்பு" நாடு முழுவதும் பரவி, எதிர்ப்பு நடவடிக்கைகள் தொழிலாளர்களால் வலுவாக வெளிப்படுத்தப்படும் என்றும் எச்சரித்துள்ளன.



உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியின் பொறுப்பற்ற மற்றும் அரசியலமைப்புக்கு முரணான இந்தக் கருத்துக்களுக்கு அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் உட்பட வங்கிச் சங்கங்களின் கூட்டமைப்பு, கடும் கண்டனம் தெரிவித்ததோடு இக்கருத்துக்களை நிராகரித்து பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தொழில் நிறுவனங்கள் மூடப்படுவதற்கு தொழிற்சங்கங்கள் மீது பழி போடுவது, 'உண்மை நிலைக்கு முற்றிலும் முரணானது' ஆகும். ஏனெனில், 'இந்தியாவில் தொழில்துறை தகராறுகள், தொழிற்சாலை மூடல்கள், ஆட்குறைப்புகள் மற்றும் தற்காலிக பணிநீக்கங்கள்' குறித்த தொழிலாளர் பணியகத்தின் அறிக்கைகள், தொழில்துறை தகராறுகளில் (INDUSTRIAL DISPUTES) குறிப்பிடத்தக்க அளவில் சரிவு ஏற்பட்டுள்ளதைக் காட்டுகின்றன. 2006ம் ஆண்டில் 430 என்ற எண்ணிக்கையில் இருந்த தொழில் தகராறுகள், முற்றிலும் மாறுபட்ட நிலையாக, 2023ல், 17 ஆண்டுகளில் இல்லாத அளவில் 30 ஆகக் குறைந்துள்ளது.

இந்தியத் தொழில்துறை சரிவிற்கு தொழிற்சங்கங்கள் காரணம் அல்ல
ஒன்றிய அரசின் தாராளமயக் கொள்கைகளே நாட்டின் தொழில் வளர்ச்சியை சீரழிக்கின்றன

தொழிற்சங்க இயக்கம் பலவீனமாகவோ அல்லது மிகக் குறைவாகவோ உள்ள மாநிலங்களில்தான் சட்டப்பூர்வமான மற்றும் சட்ட விரோதமான தொழிற்சாலை மூடல்களின் எண்ணிக்கை மிக அதிகமாக உள்ளது. நாடாளுமன்றத்தில் அரசாங்கம் அளித்த தரவுகள் நிறுவனங்கள் சட்டம், 2013ன் (COMPANIES ACT)கீழ் தொழிற்சாலைகள் இணைப்பு, மாற்றம், கலைப்பு செய்யப்பட்டதன் காரணமாக கடந்த ஐந்து ஆண்டுகளில் 2.04 லட்சம் தனியார் நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றன.

இதற்கு தொழிற்சங்கங்கள், தொழிலாளர் தகராறுகள் காரணம் அல்ல, மாறாக, முதலாளித்துவ தாராளமயப் பொருளாதார அமைப்பிற்குள் நிலவும் நெருக்கடியும், குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மற்றும் ஒட்டுமொத்த உற்பத்தித் துறையின் இழப்பும், ஒருசிலரிடம் நாட்டின் ஒட்டுமொத்த செல்வத்தின் கட்டுப்பாடற்ற குவிப்பு போன்றவைதான் தொழில்துறை மூடல்கள் அதிகரிக்க வழிவகுத்துள்ளன.

ஒன்றிய அரசின் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் பொருளாதார நிர்வாகத்தின் குறைபாடுகளை மறைப்பதற்காக தொழிற்சங்கங்களை பலிகடாவாக்க முயல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் தொழிற்சங்கங்கள் கூறியுள்ளன. தொழிற்சங்கங்கள் பொருளாதார வளர்ச்சிக்குத் தடைகள் அல்ல, மாறாக தொழிலாளர்களின் கண்ணியம், வாழ்வாதாரம் மற்றும் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அரசியலமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட ஜனநாயக அமைப்புகள் ஆகும்.

தொழிற்சங்க நடவடிக்கைகளைத் தொழில்துறை தேக்கநிலைக்குக் காரணமாகச் சித்தரிப்பது, பொருளாதார யதார்த்தங்களைத் தவறாகப் புரிந்துகொள்வதும், கட்டுப்பாடற்ற பெருநிறுவன ஆதிக்கத்திற்கு வழிவகுக்கும் கார்பொரேட் சார்பு கொள்கைகளின் அழிவுகரமான விளைவுகளைப் மறைப்பதற்குமாகும் என்றும் தொழிற்சங்கங்கள் கூறியுள்ளன.

கொள்கை சார்ந்த சுரண்டல் மற்றும் தாராளமய மறுசீரமைப்பு குறித்து மௌனம் காத்துக்கொண்டு, தொழிலாளர்களின் நியாயமான போராட்டங்களைக் குறை கூறும் வாதங்களைப் பிரதிபலிப்பதன் மூலம், இத்தகைய கருத்துக்கள் தொழிலாளர் விரோத சக்திகளுடன் ஒத்துப்போகின்றன. மேலும், தொழிலாளர் மற்றும் மக்களுக்கு எதிரான ஒரு தொடர்ச்சியான வர்க்கத் தாக்குதலுக்கு நீதித்துறை அங்கீகாரத்தை வழங்கும் அபாயத்தையும் ஏற்படுத்துகின்றன.

தேசிய சுதந்திரப் போராட்டத்திலும், சுதந்திரத்திற்குப் பிந்தைய தேச நிர்மாணத்திலும் தொழிற்சங்கங்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க மற்றும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியின் கருத்துக்கள் முற்றிலும் புறக்கணிக்கின்றன என்பது ஆழ்ந்த கவலைக்குரியதாகும்.

“தொழிற்சங்க செயல்பாடுகளை நாட்டின் முன்னேற்றத்திற்கு தடையாக சித்தரிப்பதன் மூலம் பொதுத்துறை நிறுவனங்களைக் கட்டியெழுப்புவதிலும், தொழில்துறைத் திறனை விரிவுபடுத்துவதிலும், பொருளாதார வளர்ச்சி சமூகத் தேவைகளுக்குப் பயன்படுவதை உறுதி செய்வதிலும் தங்களை ஈடுபடுத்திக்கொள்ளும் தொழிலாளர் வர்க்கத்தின் முக்கியமான பங்கினை உதாசீனம் செய்வதாகும்," என்றும், நீதித்துறையின் உயர் பதவியில் இருந்து வரும் இத்தகைய குறுகிய மற்றும் வரலாற்றுப் பார்வை அற்ற கருத்து, நீதித்துறைக்கு மிகவும் பொருத்தமற்றது என்றும் தோழர் அமர்ஜீத் கவுர் கண்டித்துள்ளார்.

தொழிற்சங்கங்களை சிறுமைப்படுத்தும் நோக்கில் நாட்டின் வளர்ச்சிக்கு தொழிற்சங்கங்கள் தடையாக உள்ளன என்ற உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியின் கருத்தினை மறுத்தும் கண்டித்தும் **LPF, AITUC, HMS, CITU, INTUC, AIUTUC, AICCTU, UTUC, TUCC, WPTUC, MLF, LLF** மற்றும் துறைரீதியான அனைத்துத் தொழிற்சங்கங்களின் ஆர்ப்பாட்டப் பேரணி பிப்ரவரி 4, 2026 புதன் கிழமை மாலை 4 மணி அளவில் சென்னை எழும்பூர் ராஜரத்தினம் ஸ்டேடியம் அருகில் நடைபெறவுள்ளது. இப்போராட்டத்தில் பெருவாரியாக கலந்துகொண்டு நம் எதிர்ப்பினை தெரிவிப்போம்.

DEARNESS ALLOWANCE FOR THE MONTHS OF
FEBRUARY, MARCH & APRIL 2026
FOR COMMERCIAL BANK EMPLOYEES

FOR SERVING EMPLOYEES – 25.00 % OF PAY
(INCREASE OF 1.07 %)

DA RATES FOR PENSIONERS
62 SLABS MORE

RETIRED PRIOR TO 01-01-1992 - 2282 SLABS OVER 600 POINTS		
Up to 1250	**1251-2000**	**Above 2000**
1528.94 % plus Rs 800	**1528.94 % plus Rs 450**	**1528.94 %**
RETIRED AFTER 01-11-1992 UPTO 31-03-1998 - 2145 SLABS OVER 1148 POINTS		
Up to 2400	**2401-3850**	**Above 3850**
750.75 % plus Rs 800	**750.75 % plus Rs 450**	**750.75 %**
RETIRED AFTER 01-04-1998 UPTO 31-10-2002 - 2011 SLABS OVER 1684 POINTS		
Up to 3550	**3551-5650**	**Above 5650**
482.64 % plus Rs 800	**482.64 % plus Rs 450**	**482.64 %**
RETIRED ON OR AFTER 01-11-2002 - 1860 SLABS OVER 2288 POINTS		
FOR THE ENTIRE BASIC PENSION AMOUNT – 334.80 %		
RETIRED ON OR AFTER 01-11-2007 - 1723 SLABS OVER 2836 POINTS		
FOR THE ENTIRE BASIC PENSION AMOUNT – 258.45 %		
RETIRED ON OR AFTER 01-11-2012 - 1322 SLABS OVER 4440 POINTS		
FOR THE ENTIRE BASIC PENSION AMOUNT – 132.20 %		
RETIRED ON OR AFTER 01-11-2017 - 844 SLABS OVER 6352 POINTS		
FOR THE ENTIRE BASIC PENSION AMOUNT – 59.08 %		
RETIRED ON OR AFTER 01-11-2022 – 25.00 POINTS OVER 123.03 POINTS		
FOR THE ENTIRE BASIC PENSION AMOUNT – 25.00 %		

போராடிப் பெற்ற தொழிலாளர் நலச் சட்டங்களைப் பாதுகாத்து
தொழிற்சங்கச் செயல்பாடுகள் - தொழிலாளர் உரிமைகளை உறுதி செய்யவும்
தனியார்மயத் திட்டங்களை தடுத்து பொதுத்துறை வங்கிகளைப் பாதுகாத்திடவும்
12-02-2026 அன்று நாடு தழுவிய வங்கி ஊழியர் வேலை நிறுத்தத்தினை
மாபெரும் வெற்றி பெறச் செய்வோம்